சிவமயம்

gistered as a News paper in Ceylon.
P. M. G. NO. H. A 39/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருஅ] யாழ்ப்பாணம்— விய ஹூ வைகாசிமீ கஅஉ (1946 மே 31 வெள்ளிக்கிழமை) [இல கசுரு

# இனிச் செய்வது என்ன?

## புதிய அரசியலில் தமிழ்மக்கள் கடமை முற்போக்குள்ளவர்களுடன் ஒத்துழைப்பு

### தமிழர் மகாநாட்டில் ஸ்ரீ பொன்னம்பலம் பேருரை

சென்ற ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் இலங்கைத் தமிழர் மகாநாட்டின் ஆதரவில் நிகழ்ந்த ஓர் பொதுக் கூட்டத்தில் ஸ்ரீ ஜீ. ஜீ. பொன்னம்பலம் இலங்கைத் தமிழர் நிலைபற்றிப் பின்வருமாறு பேசினார்.

"இலங்கையில் வாழும் தமிழ்மக்களுக்கு விரோதிகள் யார்? கோடாலி தன்னுளே மரமது புகுந்து தன் கோத்திரம் எல்லாம் அழிக்கும் என்றாங்கு தாமும் தமிழர் எனத் தம்பட்டம் அடித்துவரும் ஓர் சிலரே இந்தத் தமிழ்ச் சமூகத்துக்குப் பரம விரோதிகளாவர். உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசி, சொல்வதொன்று, செய்வதொன்றுமாக இருக்கும் பச்சோந்திகளனைய ஓர் சில தமிழ்மக்களால் எம் சமூகத்துக்கு எந்நேரமும் ஆபத்துத்தான், நான் இதுவரை எந்த லட்சியத்துக்காகப் போராடினேனே, எந்த நோக்கத்துக்காக வாதிட்டேனே அவற்றைப் பூர்த்தியாக்க எடுத்துக் கொண்ட நடைவடிக்கைகளுக்கு நான் பச்சாத்தாபப்படவில்லை. எது என் கடமையென நினைத்தேனே, அதனைச் சாதித்தேன்: வெற்றியும் தோல்வியும் வேறு விஷயம், இலங்கை வாழும் சிறுபான்மையினர் ஐம்பதுக்கைம்பது பிரதிநிதித்துவம் கோரிப் போரிட்டோம். நாம் மற்றும் பெரும்பான்மைச் சாதியினரால் நசுக்கப்படாமல் இருப்பதற்காகவே ஐம்பதுக்கைம்பது என்று வாதிட்டோம்; எம் போராட்டம், இந்த இலங்கையின் சரித்திரத்திலே இடம் பெறக்கூடிய மகத்தான ஓர் சம்பவமாகும்,

'எங்களுடைய நியாயமான கோரிக்கைகளை சோல்பெரிக் கமிஷனிடம் எடுத்துரைத்தோம். தகுந்த ஆதாரங்களுடன் எம்கட்சியை விளக்கினோம். ஆனால் அந்த விசாரணைச் சபையினர் எம் கோரிக்கைக்கு நேரடியான பதில் கொடுக்காது, விஷயத்தை மழுப்பிவிட்டனர். எனவே எங்கள் அடிப்படையான கோரிக்கைகளை நிராகரிக்கும் இந்த அரசியற் சட்டத்தைப் பலமாகக் கண்டிக்கிறோம். வரப்போகும் பல வருடங்களுக்கு, இத்திட்டம் எங்கள்மீது திணிக்கப் பட்டிருக்கிறது.

"இலங்கையின் முழுஜனத்தொகையில் தமிழர்களாகிய நாம் 25 விகிதத்தினர்; நாம் எமக்கு மூன்றில் ஒருபங்கு பிரதிநிதித்துவம் கேட்டோம். புதிய அரசியலமைப் பின்படி 95 ஸ்தானங்கள்தான் வடகீழ் மாகாணங்களுக்கு இருக்கும்; இவற்றில் 4 ஸ்தானங்கள் திட்டமாக முஸ்லீம்களுக்கே கிடைக்கும்; மிகுதியான 12 ஸ்தானங்கள்தான் தமிழ் மக்களுக்குக்கிடைக்கும். இத்தொகை முந்திய அரசியற் திட்டங்களின் தொகையிலும் குறைந்ததாகும். குடிசனத் தொகையின்படி என்றாலும் எமக்கு 25 ஸ்தானங்களாவது இருக்கவேண்டும். எல்லாமாக, நியமிக்கப்படும் அங்கத்தவர்களையும் சேர்த்து சிறுபான்மையினர்க்கு 101 அங்கத்தவர்கள் உள்ளசபையில், 35 ஸ்தானங்களுக்கு மேற் கிடைக்கமாட்டாது.

'எதிர்காலத்தில் பிரிட்டிஷாரிடம் இருந்து நாம் எவ்வித உதவியையும் எதிர்பார்க்கவொண்ணாது. எம்கையே நமக்கு உதவி. நமது போராட்டத்தை நாமே நடாத்தவேண்டும். இந்த சோல்பெரித் திட்டம் கேவலம், நீதியை வழங்க மறுக்கிறது இந்தியத் தொழிலாளர்களை, பெரும்பான்மையினர் நாய்களைப்போல நடாத்தினால் தமிழ்மக்களாகிய நாமும் இனிமேல் அப்படித்தான் நடத்தப்படுவோம். இவ்விஷயத்தில் ஓர் சில தமிழ்ப் பிரதிநிதிகள் நடந்துகொண்ட முறை அவமானத்தைத் தருவதாகும்.

'புதிய அரசியற்றிட்டத்தை நாம் பகிஷ்காரம் செய்யலாமா? என்று ஓர் கேள்வி பிறக்கிறது. அப்படிச் செய்வதாற் பயன் இல்லை. வரப்போகும் பாராளுமன்றத்தில்முன்னேற்ற மனப்பான்மை கொண்ட சிங்களத் தலைவர்களுடன் நாம் ஒத்துழைக்க முடியும். சிங்கள இளைஞர்களிடையே

தமிழ்மக்களுடன் சேர்ந்து வேலை செய்யக்கூடிய பல கட்சிகள் உண்டு. அக்கட்சிகளுடன் நாம் சேர்ந்து கொள்ளவேண்டும். தமிழ்மக்களாகிய நாமும் எமது உரிமைகளுக்காகப் பாடுபடக்கூடியவர்களையே அங்கத்தவர்களாகத் தெரிவுசெய்யவேண்டும்."

## இந்தியாவில் உள்ள பிரிட்டிஷார்

இந்தியா சுதந்திரம் பெற்றுவிட்டால், அங்குள்ள பிரிட்டிஷ் பெண்களையும் குழந்தைகளையும பாதுகாப்பது யார்? அவர்களை இங்கிலாந்துக்குத் திருப்பியனுப்ப ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று பாராளுமன்றத்தில் சேர் வால்ற்றன் ஸ்மித்தர்ஸ் என்னும் அங்கத்தவர் கேட்டார் உதவி இந்தியாமந்திரியான மிஸ்ரர் ஆர்தர் ஹென்டர்ஸன் "இப்படிக் கூறுவதில் நியாயமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இந்தியாவில் உறவினர்களும் சிநேகிதர்களும் உள்ள பிரிட்டிஷ் மக்கள் காரணமின்றிப் பீதியடையத்தக்க யோசனையை மிஸ்ரர் ஸ்மித்தர்ஸ் கூறியதையிட்டு நான் வருந்துகிறேன்" என்று பதிலளித்தார்.

## வர்ணப் பெட்டிமுறை நீக்கப்படுமா?

அரசாங்கசபைத் தேர்தலின்போது, அபேட்சகர் ஒவ்வொருவர்க்கும் ஓர் வர்ணம் கொடுக்கப்படுகின்றது. வாக்காளர் தாம் பெறும் வாக்குச் சீட்டுக்களை தாம் விரும்பும் அபேட்சகர்க்குரிய வர்ணப் பெட்டியில் இடுவர். இந்த முறையை ஒழித்து அபேட்சகர்களின் பெயர் எழுதப்பெற்ற சீட்டில் தாம்விரும்பிய அபேட்சகரின் பெயருக்கெதிரே வாக்காளர் அடையாளம்இட்டுப் பெட்டிக்குள்போடும் முறையைஅநுசரிக்கவேண்டும் என்று இலங்கை மந்திரிசபையினர் தீர்மானித்திருக்கின்றார்கள்.

# ருஷியா என்ன செய்யப்போகிறது?

## ஆங்கில-அமெரிக்கர்க்கு விரோதமானபிரசாரம் அமெரிக்க கொள்கைக்குக் கண்டனம்

—(:—:)—

### ரேடியோப் போராட்ட ஆரம்பம்

நாஸிக் கட்சியினர், ஜெர்மனியில் அதிகாரம் வகித்திருந்தபோது, அயல்நாடுகளைத் தாக்க வேண்டுமானால், அதற்குமுன்ரேடியோமூலமும், ஏனைய சாதனங்கள் மூலமாயும் அந்நாடுகளுக்குவிரோதமாகப் பிரசாரம் செய்துவருதல் சகஜம். அந்த முறையை இன்று ருஷியா அநுட்டித்து வருகிறது என்று பிரிட்டிஷ்-அமெரிக்க வட்டாரங்கள் கூறிக் கொள்ளுகின்றன.

ருஷியஅரசாங்கம் இப்போது தன்னிடம் உள்ளதைவிட இன்னும்அதிகமான 28 ரேடியோநிலையங்களை ஸ்தாபித்து60அந்நியநாட்டுமொழிகளில் ஒலிபரப்புதற்கான ஒழுங்குகளைச் செய்து வருகின்றது என்றும் இதன்மூலமாகத் தனது சமதர்மக் கொள்கைகளை உலகெங்கும் பரப்ப முயற்சிக்கின்றது என்றும் பிரபல லண்டன் பத்திரிகையான 'ஸண்டே டிஸ்பாச்' கூறுகிறது.

அதிகார வெறி பிடித்தவர்கள் பிரிட்டிஷார். இங்கிலாந்தை உலகில் உள்ள சனங்கள் யாவரும் வெறுக்கின்றனர். தான் கூறும் வாக்குறுதிகளை ஒருபோதும் இங்கிலாந்து நிறைவேற்றி வைப்பதில்லை என்றிவ்வாறு ருஷியா ரேடியோமூலம் பிரசாரம் செய்து வருவதை ருஷிய மக்கள் நம்பி விடுகின்றனர் என்று 'சண்டே டிஸ்பாச்' கூறுகிறது

இது இவ்வாறாக அமெரிக்காவையும் ருஷ்யாஇப்போது மெல்லமெல்லவாகத் தாக்க ஆரம்பித்திருக்கிறது. "உலக விவகாரங்களை விவாதிக்கும் சிலர், இவ்வுலகம் ஓர் பள்ளிக்கூடம் என்றும் அமெரிக்காவே அதன் உபாத்தியாயர் என்றும், மற்றநாடுகள் எல்லாம் மாணவர்கள் என்றும் கருதுகின்றனர் உலக வியவகாரங்களை யறியாத கோஷ்டியினர் கூறும் யோசனைகளாலும் அவர்களுடைய பேச்சுக்களாலும் தேசநாடுகளிடையே ஒற்றுமை ஏற்படுவது எவ்வாறு சாத்தியம்?' என்று ஓர் ருஷியப் பத்திரிகை கூறுகிறது.

# இலங்கை இந்தியர்க்கு அநீதி

## இந்தியப் பத்திரிகையின் கண்டனம்

### இனியாவது புத்தி வருமா?

சென்னை "ஹிந்து"ப் பத்திரிகை பின்வரும் கருத்துப்பட எழுதுகிறது:

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு இலங்கைவாழ் இந்திய மக்கள் எவ்வளவோ உறுதுணையாகவிருந்து வருகின்றனர். அப்படிப்பட்ட ஓர் சமூகத்தின் நம்பிக்கையைப் பெற மிஸ்ரர் சேனநாயக்கா தவறிவிட்டார். இலங்கையில் உள்ள இந்திய மக்களை அவர் எவ்வளவு உதாசினமாக இதுகாறும் நடத்திவந்தார் என்பதை நாம் மறப்பதற்கில்லை. ஆனால், புதிய அரசியல் அங்குரார்ப்பணம் செய்யப்படும். இச் சந்தர்ப்பத்தில், சிங்கள மக்கள் கூடிய அதிகாரம் பெறப்போகும் நிலைமையில், மிஸ்ரர் சேனநாயக்கா இந்திய மக்களின் நல்லெண்ணத்தைப்பெற முயற்சி செய்திருந்தால், பழைய சம்பவங்களை மறக்க நாம் தயார். உருளிவெளித்தோட்ட சம்பவம் மிஸ்ரர் சேனநாயக்காவின் உண்மை நிலையை நன்கு விளக்குகின்றது. இந்தச் சிறிய அற்ப விஷயத்திலேனும், அவர் பண்டிதர் நேருவின் நியாயமான வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கவில்லை. இவ்விஷயத்தில் இலங்கை அரசினரும், இந்திய அரசினரும் பராமுகமாயிருந்தபடியால் வியவகாரம் இவ்வளவுக்கு முற்றிவிட்டது. சென்ற 12-ம் திகதி இந்திய மக்கள் ஓர் கண்டனக்கூட்டம் வைத்ததையிட்டு ஆத்திரமடைந்த சிங்களர் சிலர், அவர்களை நையப்புடைத்தனர் என்றோர் செய்தியும் வெளிவந்திருக்கிறது. இப்போதுதானும் ஒன்றும் மூழ்கிப்போய்விடவில்லை. இலங்கை அரசாங்கம் அநீதி விளைக்கமாட்டாது 'எனச் சிறுபான்மையினர் நம்பிக்கை வைக்கத்தக்கவிதமாக மிஸ்ரர் சேனநாயக்கா நடந்து கொள்ளுவார் என்றும நம்புகிறோம்.

## இதுவும் சேர்ந்துவிட்டது!

இலங்கைத் தேசிய காங்கிரஸ் மகாசபை மிஸ்ரர் சேனநாயக்காவைத் தலைவராகக் கொண்ட ஐக்கிய தேசீயக்கட்சியிற் சேர்வது எனத் தீர்மானித்திருக்கிறது.

## நகரசபை உத்தியோகத்தர்க்கு வாடகைப் பணம்

கொழும்பு நகாசபையில் வேலைசெய்யும் உத்தியோகத்தர்களுக்கு வீட்டு வாடகைக்கான "அலவன்ஸ்" பணம் உதவ நகரசபை தீர்மானித்திருக்கிறது.

## மன்னர் பிறந்த தினம்

வருகிற ஜூன்மீ 13ம் திகதியை மன்னர் பிறந்த தினமாகக் கொண்டாட இலங்கை அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது,

## கணக்குப் பரிசோதனைப் பகுதித்தலைவர்

இலங்கைக் கணக்குப் பரிசோதனைப் பகுதித் தலைவரான மிஸ்ரர் அலன் ஸ்மித் என்பவர் சென்ற திங்கட்கிழமை தொடக்கம் தம் பதவியைக் கையேற்றுக் த பார்த்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஹூ
வைகாசிமீ கஅஉ வெள்ளிக்கிழமை

## பட்டினசங்கம் இட்ட வெளிச்சம்

சில மாசங்களாக இந்த யாழ்ப்பாணப் பட்டினத்தில் குறைந்தும் பெரும்பாலும் இல்லாமலும் போன மின்சார வெளிச்சம் ஒரு அளவிற்குப் பழையபடி சென்ற செவ்வாய்க்கிழமை (29-5-46) மாலைதொடக்கம் இடங்கள் தோறும் பிரகாசிக்கக் காணப்பட்டது வெளிச்சம் குறைக்கப்பட்ட வீடுகள் ஏனைய தாபனங்கள், தெருவீதிகள், நாற்சந்திகள், முச்சந்திகளுக்கெல்லாம் தொன்மைபோல, வெளிச்சம் உதவப்படுமென எங்கள் பட்டினசங்கத் தலைவர் முந்தியே விஞ்ஞாபனம் வெளியிட்டிருந்தார். ஆனால், பெருந் தெருக்கள் வெளிச்சத்தோடு காணப்பட, இன்னமும் எத்தனையோ குறுக்குத் தெருக்கள் அவற்றின் இரு அந்தங்களாகிய சந்திகளிலன்றி இடையில் வெளிச்ச மின்றிக் காணப்படுகின்றன; தீபத்தம்பங்கள் பல வெளிச்சத்தோடு கூடியனவாய்ச் சிரித்தபடி காணப்பட, குறுக்குத் தெருக்களிலும் ஆவசியகம் வெளிச்சம் வேண்டிய சந்திகளிலும் மூலை'மூடு'க்குகளிலும் நிற்கும் சில தீபத்தம்பங்கள் "பல்ப்" தானுமின்றி இருட்டிற் கவலையோடு காணப்படுகின்றனவே; இந்தத் தம்பங்களுக்கு வெளிச்சம் இடுவதெக்காலம்? இவை சிரிப்பதெக்காலம்? இவற்றின் அயலிலே சஞ்சரிப்போர் திருடராலும், குடிகாரராலும் விஷசெந்துக்களாலும் நேரக்கூடிய தீமைகளின்றி வெளிச்சத்திலே சஞ்சரிப்பதெக்கால மென்று எங்கள் பட்டினப் பிதாக்களைக் கேட்கின்றேம்.

பட்டினத்திலே பல இடங்களுக்கு வெளிச்சமிட்டு, சில இடங்களுக்கு அதனை இடாதொழியின், வெளிச்சமிட்ட இடங்களிற் பரந்திருந்த இருளெல்லாம் அவ்விடத்தை விட்டகன்று, வெளிச்சமிடாத இடங்களிலுள்ள இருளோடு சேர்ந்து தடித்து அவ்விடங்களிலே பேரிருளை ஆக்கிவிடுகின்றன வெனவும், அதனால் தாங்கள் செய்யுந் தொழிலுக்கு அந்த இருள் துணைபுரிகின்றதென்றும் திருடர்கள் சொல்லிச் சந்தோஷப்படுகின்றார்களாமே? இது மெய்தானே? மேலும் பட்டினப் பிதாக்களென்றிருப்பவர்கள் பட்டினத்திற் பல இடங்களில் வெளிச்சமிட்டுச் சில இடங்களில் வெளிச்சமிடாமல் இருளைத் தடிக்க விடு[illegible] ஒருகண் விழித்து ஒருகண் [illegible]துபோற் பட்சபாதத்தின்பாற்படுமெனப் பட்டின வாசிகளுள் வெளிச்சமிடாப் பகுதிகளிலிருப்போர் பேசுகிறார்களே; அவர்கள் அப்படிப் பேசுவதும் பிழையாகாதல்லவா?

பட்டினத்தில் வெளிச்சமிடுவதால் வரும் நன்மைகளும்; இடாதொழிவதால் வரும் தீமைகளும் பட்டினப் பிதாக்கள் அறியாதனவல்ல; வெளிச்சமிடப்படுதலின்றி இப்பட்டினம் எங்கும் அந்தகாரத்தோடு கூடியிருந்தகாலத்தில், இப்பட்டினத்திலேயுள்ள பல வீடுகளிற் களவுபோன பொருள்கள் கொஞ்சமல்ல; பெரும் பொருட் களவுகளும் வீடிடித்துக் கதவுடைத்துச் செய்யப்படும் பயங்கரமான களவுகளும் இப்பட்டினத்தில் நடந்திலவெனினும், வீட்டின்புறத்தே உலரக் கட்டிய சேலை துணிகளும், வீட்டு விருந்தை, கிணற்றடிப்பக்கம் முதலாம் இடங்களிற் கிடந்த கடாரம் முதலிய பொருள்களும் தலைவாசற்பக்கலில் வைக்கப்பட்ட நாற்காலி முதலியனவும் திருடப்படலாயின; இவற்றிற்கெல்லாம் பிரதான காரணங்கள் இராணுவப் பகுதியிற் பலவகையான தொழிலைச் செய்து வேதனம் பெற்றுவந்த இங்குள்ள மக்களுட் பலர் அத்தொழில் இல்லையாக, இப்பொழுது பிழைக்க வழியின்றிச் சீவனஞ்செய்ய வகையின்றித் தெருவீதிதோறும் மடியர்களாய் அல்லும் பகலும் அலைந்துதிரிவதும், குடிவெறி இக்காலத்திலே அதிகப்பட்டிருத்தலும் சூது முதலிய தீய கருமங்கள் இரகசியமாக நடைபெறுதலுமே யெனலாம். இவற்றை நீக்கும் விஷயத்திற்குப் பட்டினம் முழுவதும் வெளிச்சமிடுதல் ஒருதுணையென்பது நிசம். ஆனாலும், இப்பட்டினத்திலே இராக்காலத்திற் காவற் பொலிசாரின் சஞ்சாரம் மிகவும் குறைந்துவிட்டது. பொலிஸ் பகுதியாரும் இவ் வெளிச்சத்தைத் துணையாகக்கொண்டு பட்டினம் முழுவதும் இராக் காலத்தில் வரைவின்றிச் சஞ்சரித்துக் காவல் செய்வார்களேயானால் இக் களவு முதலிய தீமைகள் விரைவிற் குறைந்து காலகதியில் ஒழிந்துவிடுமெனப் பொலிசாருக்குந் தெரிவிக்கின்றேம்

## "வெருட்டுக்கு அஞ்சமாட்டோம்"

உருளிவெளித் தோட்டத்து இந்தியத் தொழிலாளர் விஷயமாக, இலங்கைமுழுவதும் உள்ள இந்தியர் வேலைநிறுத்தம் செய்தால் என்ன, செய்யாவிட்டால் என்ன அதனைப்பற்றி அரசாங்கம் சிந்திக்கப்போவதில்லை. குறித்த தோட்டத்துத் தொழிலாளர் வெளியேற வேண்டும். வெளியேறத் தவறினால், சட்டபூர்வமான நடைவடிக்கை அவர்களுக்கெதிராக எடுக்கப்படும் என்று நிலப்பகுதி அதிகாரியான மிஸ்டர் எர்ணென்ற் என்பவர் ஓர் பத்திரிகை நிருபர்க்குக் கூறினர்.

## அந்தரங்க முறையை நீக்கவொண்ணாது

தற்போதுள்ள முறைப்படி, ஓர் வாக்காளர் தாம் நினைத்த எந்த அபேட்சகர்க்காவது தன் வாக்குச்சீட்டை எவரும் அறியாதபடி போடலாம் அந்த முறையை எவ்விதத்திலாவது மாற்றவொண்ணாது என்னும் ஓர் தீர்மானத்தைத் தாம் எடுத்தாளப்போவதாக மாத்தளைப் பிரதிநிதியான மிஸ்டர் R. [illegible] அறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்—101)

### ஆம் அம்மா அப்பொழுதுதான் எழுப்பினேன்

அடுத்தநாளிரவும் அவர்களனைவரும் போசனம் முடித்துக்கொண்டு திருமடத்தின் முன்றிலிற்றானே இருந்தபடி புதிய துறவியம்மாள் தன் பரிதாபமான வரலாற்றைக் கவலையுடன் சொல்ல, விசுவநாதன் விசாலாட்சி இராமன் முதலியோர் பரிவுடன் கேட்பாராயினர்; அத்துறவியம்மாள் தன் வரலாற்றின் தொடர்பைப் பின்வருமாறு கூறுவாளாயினள்:—

"மகளே, கவலையோடுகூடிய காலத்திலே இரவிற் காணுஞ் சொப்பனமும் பயங்கரமாகத்தானிருக்கும்; ஏதோ பொல்லாத சொப்பனங் கண்டேன்: அதைக்கேட்டு நீ கவலைப்படவேண்டாம்: பயப்படவேண்டாம் என் கண்ணே" என்று சொல்லவும், அப்படியல்ல அம்மா, அதனை நீங்கள் எனக்கு உள்ளபடி சொன்னாற்றான் என்மனம் தேறுதலடையுமென்று இரந்தேன்; என்வேண்டுகோளை மறுக்க இயலாமல் என் தாய் என்னைப்பார்த்து, "நீ பயப்படாதே, வேறொன்றுமல்ல, இப்பொழுது சிலநாளாகச்சொப்பனவத்தையிலே உன் அப்பர் என்னிடம் வந்து, நீவா, நாங்கள் யாத்திரை செய்யப் போவோம் என்று என்னைக் கேட்க, நான் என் பிள்ளையைத் தன்னந்தனியே விட்டு உங்களுடன் யாத்திரைக்கு எப்படி வருவேன்; ஒருபோதும் வரமாட்டேன் என்று மறுப்பதாகக் கனவு காண்கிறேன்; அந்த நேரத்திலேதான் மகளே நான் வாய்புலம்ப, நீ என்னை எழுப்பினை போலும்" என என்தாய் சொல்ல, "ஆம் அம்மா, அப்பொழுதுதான் உங்களை எழுப்பினேன்; அதுகிடக்க நீங்கள் இப்படிக் கனக்கண்டு வருவதனாற்றான் அன்றொருநாள் நான் தனிக்கப்போகிறேனென்று எனக்குச் சொல்லிக் கவலைப்பட்டீர்கள்" என்றேன்: "இல்லை மகளே, கனவிற் காண்பவெல்லாம் நிசமாய் நடக்கப்போகிறதா என்று சமாதானஞ் சொல்லி என் அன்னையார் என்னைத் தேற்ற நானும் மனந்தேறினேன்.

### கொடுத்து வைக்காப் பாவிகளானேம்

இப்படிச் சில வாரங்கள் கழிந்தபின் ஒரு வெள்ளிக்கிழமை என் தாயார் எண்ணெயிட்டு முழுகியபின் அன்றிரவு தமக்கு உடம்பு கொதிக்கிறது, தாங்கொணாத் தலையிடி யுண்டாய்விட்டதென்று சொல்லிப் படுத்துக்கிடந்தார்: அன்றிரவு விடிவதற்கிடையில் என் அன்னையாரின் நோய் அதிகப்பட்டது; அடுத்தநாட் புலரிக்காலத்தில் நான் எழுந்து என் சிறியதாயிடம் போய்ச் சொல்ல, சிறியதாயார் என்னுடன் கூடிக்கொண்டு வந்து என் தாயாரைப் பார்த்துவிட்டு உடனே மீண்டுபோய்ச் சிற்றப்பருக்குத் தெரிவிக்க, அவர் உடனே வந்து என் மாதாவைப் பார்த்தார்; பார்த்துவிட்டு உடனே அயலிலுள்ள எங்கள் குடும்ப வைத்தியரிடம் சிறிய தந்தையர் போய் அவரை அழைத்துக்கொண்டு வந்து தாயாரைக் காட்ட, அந்த வைத்தியர் கைநாடி பார்த்துவிட்டு, என் சிற்றப்பனுரையும் உடன் அழைத்துக்கொண்டு தலைவாசற்பக்கம்போய் ஏதோ இரகசியமாகச் சொன்னார்; வைத்தியர் என்தாயாரின் நோயைப் பற்றி என்ன சொல்லுகிறாரென்பதை அறிய விரும்பி ஆவலுடன் அவர்கள் பிறகே சென்ற எனக்கு, அவர்களிருவரும் இரகசியமாகப் பேசியவை புலப்படவில்லை; என் சிற்றப்பர் வைத்தியருக்கு விடைகொடுத்து அவரை யனுப்பிவிட்டு, உடனே எங்கோ சென்று முகத்தில் அம்மைத்தழும்புள்ள ஒரு முதிய பிராமணப் பெண்ணைக் கூட்டிக்கொண்டு வந்து எங்கள் தாயாரைப் பராபரிக்க ஒழுங்கு செய்து, என்னைத் தன்வீட்டில் வந்து இருக்கும்படி சொல்ல, நான் என்னைப் பெற்றவளை விட்டுப்பிரிய மனமில்லாமல் விம்மி விம்மி யழுதேன்; அதனைக் கண்டு என் சிறிய பிதா, "நீ அழவேண்டாமடி யம்மா, இது தொற்றுநோய், ஆனதாற்றான் உன்னை எங்கள் வீட்டிற்கு இட்டுக்கொண்டு போகிறேன்: நீ உன் தங்கையோடும் சின்னம்மாவோடும் சில நாட்கள் இருக்கலாம்; உன் தாயாரின்நோய் மாறியவுடன் நீ பழையபடி உங்கள் வீட்டில் வந்திருக்கலாம்; இப்பொழுது நான் கூட்டிக்கொண்டுவந்த அந்த மனுஷி உன் தாயாரைப் பார்த்துப் பராபரிப்பாள்; நீ கவலைப்படாதே" என்று தேறுதல் சொல்லி என் கண்ணீரைத் தம்முடைய அங்கவஸ்திரத்தினால் துடைத்துத் தங்கள் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போனார்; நான் அங்குத்தானே சிலதினம் வசித்தேன்; வசித்தாலும், என்மனம் எந்த நேரமும் தாயாரைச் சிந்தித்துக் கவலைப்பட்டுக்கொண்டிருந்தது; உண்ண உறங்க எனக்கு மனமெழுந்திலதெனினும், என் தங்கை தான் உண்ணும்போது என்னையும் உடனிருத்தி உண்ணச் செய்வாள்; ஒருவாறு உண்டாலும் உறக்கமென்பது என்னைவிட்டகன்றது என் சிற்றன்னையும் சிறிய தந்தையாரும் இடையிடையே என் தாயாரைப் பார்த்து வருவார்கள்; கவலையோடு கூடியவர்களாய்த் தங்களுட் பரஸ்பரம் ஏதோ பேசிக்கொள்வார்கள்; ஆனால் என் தாயாரின் சுகத்தைப்பற்றி நான் அவர்களுடன் ஏதும் விசாரித்தால், அவர்கள் உடனே முகமலர்ச்சி காட்டி, "அப்படி யொன்றுமில்லையடி யம்மா, நீ கவலைப்படாதே, உன் அம்மாவின் நோய் தணிந்து வருகிறது" என்று எனக்குத் தேறுதல் சொல்லிவிடுவார்கள்: இப்படியாக ஒருநாள் இரவில் என் சிறியதந்தையார் ஒருவாறு உறங்கிக் கிடந்த என்னை எழுப்பி, உன் தாயார் உன்னைப் பார்க்க ஆசைப்படுகிறார் என்று சொல்ல, நான் பித்துக்கொண்டாள் போல் பதைபதைத்து எழுந்து ஓடிப்போய் "அம்மா, அம்மா! என் அருமை அம்மா" என்று ஓலமிட்டு அழுதழுது கூப்பிட்டேன்; பதிலில்லை; என்னைப் பெற்று வளர்த்தவளைத் தீண்டப்போனேன்: அருகில் நின்ற பிராமணக் கிழவி தீண்டவொட்டாது தடுத்தாள்; இதற்கிடையில் என் சிற்றப்பா வந்து "உங்கள் பிள்ளை வந்து நிற்கிறாள்" என்று தாயார் முகத்தைப் பார்த்துச் சொல்ல, கேட்டவுடனே என்னைப்பெற்றவள் கண்விழித்தாள்; அன்னையின் கண்களில் நீர் தாரை தாரையாக வடிவதை விளக்கு வெளிச்சத்தில் அவதானித்தேன்; ஏன் அம்மா அழுகிறீர்கள், அழாதீர்கள் என்று என் அருமைத்தாயைத் தேற்றப் புகுந்[illegible] நானும் அழுதேன்; "நான்பெற்றவளே, கனவு நனவாய் முடிந்தது; உன் அப்பர் என்னைத் தம்முடன் வரும்படி கூப்பிடுகிறார்; அவருடன் கூடிக்கொண்டு நான் போகப்போகிறேன்......" என்று சொல்லி முடிவதற்கிடையில், "ஐயோ! என் அம்மா, நீங்களும் என்னை இந்தச் சின்னஞ்சிறு வயதில் தன்னந்தனியே விட்டுப் போனால், நான் என்ன செய்வேன்! எந்தக் கிணற்றிற் போய்க் குதிக்கப் போகிறேன்; எந்தக் கடலிற் போய் விழப்போகிறேன்" என்று கதற, என் சிற்றப்பர் எனக்குக்கிட்ட வந்து

தொடர்ச்சி 5 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைச் சமயம்

…… சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை ……

உண்மைச் சமயத்தின் கொள்கைகளை ஆராயுமுன்னர் உண்மையாவது யாதெனத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். உண்மை, மெய், சத்தியம் என்பன ஒரு பொருள் தருவன. உண்மை இன்னதென்று உணர்தற்கு முடியாதது என்று சிலர் கூறுப. அப்படியொன்றுமன்று. அது சிறு பிள்ளைகளும் அறியத்தக்கது. ஒளவையார் தமது ஆத்திசூடியில் 'கண்டொன்று சொல்லேல்' என்னுஞ் சிறுசூத்திரத்தால் உண்மையை விளக்குகின்றார். அச் சூத்திரத்தால் போந்த பொருள் எனையெனின் கண்டதொன்றிருக்க மற்றொன்றைச் சொல்லலாகாது என்பதாம். இச்சூத்திரம் எதிர்மறையாய் அமைந்துள்ளது. வேறுவிதமாக இச் சூத்திரம் முதலிய பொருளை விளக்குதலாகாது.

அசத்தியம் அல்லது பொய் என்பது யாது! பொய்யாவது ஒருபொருளைக் கண்டிருக்கவும் வேறொன்றைக் கண்டதாக மாற்றிக் கூறுவது. ஒரு விஷயத்தைக் கேட்டிருக்கவும் பிறிதொன்றைக் கேட்டதாகச் சொல்லுவது. ஒரு பொருளைப் பரிசித்திருக்கவும் இன்னொன்றைப் பரிசித்ததாகப் புகலுவது. ஒன்றைப்பற்றி நினைத்திருக்கவும் மற்றொன்றைப்பற்றி நினைத்ததாக அறைவது. இவற்றிலிருந்து உண்மை இன்னதென்று ஒருவாறு அறியலாம். யாம் கண்டதும், கேட்டதும், பரிசித்ததும், எண்ணியதும் இவையென்று கூறுவதே உண்மை யெனப்படும். மேற் காட்டிய ஆத்திசூடிச் சூத்திரமே நமது சமுதாயத்தாற்கு தஞ்சமாயிருப்பது. நீதிமன்றத்திலும் சமயச் சாலையிலும் உபயோகமாயுள்ளது. நியாயசபையில் ஒருவன் தான் கண்டதை அல்லது கேட்டதைப்பற்றிச் சொல்ல சாக்ஷியாக வருகின்றான். அச்சாட்சி தான் கண்டதையோ கேட்டதையோ அப்படியே சொல்லுவானாயின் அவன் உண்மையைக் கூறினான் என்று கூறுகிறோம். அவன் பார்த்ததொன்றும் கேட்டதொன்றுமாயிருக்க வேறொன்றைப் பார்த்ததாக அல்லது கேட்டதாகச் சொல்லுவானாயின் அவன் பொய் பேசியதாகக் கூறுவோம். சாட்சி சொல்லவந்த விஷயம் உண்மையாகவே இருக்கலாம். ஆனால் சாட்சி சொல்லவந்தவன் அதனைக் காணவில்லை, கண்டதாக நியாயசபையிற் கூறியிருக்கிறான். இவனுடைய சாட்சியம் பொய்யானதே.

ஓர் கடைக்காரன் செல்லாக்காசை நல்ல காசெனக் கொடுக்க முயல்வதைத் தவறெனக் கொள்ளுகிறோம். ஒருவன் முரட்டுக் குதிரையை நல்ல குதிரையென்று சொல்லி விற்பது ஏமாற்றமாகும். உலக இயற்கை என்னையெனின் ஒரு பொருளைப் பார்த்தும் அதனைப் பிறிதொன்றாகப் பேசுவதாம். இந்த மாற்றம் எப்படி நேர்கின்றது? இம் மாற்றத்திற்குப் பல காரணங்கள் உள. தன்னலம், வெறுப்பு, அகங்காரம், பார்வைக் குறைவு, பயம், இருள் முதலியன சாட்சி சொல்பவன் எவ்வளவு யோக்கியனாயிருப்பினும் அவனை மாற்றிவிடுகின்றன. ஒரு நிகழ்ச்சியைப் பலர் ஒரே சமயத்தில் பார்த்திருக்கலாம். ஆனால் ஒருவர் சொல்லும் சாட்சியம் மற்றவர் கூறுவதோடு ஒவ்வாதிருப்பது உலகப் பிரசித்தம். இப் பேத உணர்வுக்குக் காரணம் ஐயம், திரிபு, மயக்கம் என்பர் அறநூல் வல்லோர். காணப்படுவதொன்றாயிருக்க அதனைத் தவறாகப் பிறிதொன்றாகக் கருதுவித்த மயக்கத்தால் நேர்ந்த பிழைபாடு என்று சொல்லுதலுமாம். ஐயம், திரிபு, மயக்கம் முதலியன இல்லாமல் நேரே கண்டதே உண்மையாம். அப்படிக் கண்டதைத் தவறாக விளங்கிக் கொண்டமை அசத்தியமாம்.

'கண்டொன்று சொல்லேல்' என்னும் ஒளவையார் சூத்திரத்தையே சிறிது விளக்கி நாயனார் தமது திருக்குறளில் (மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில்)

'பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும் மருளானா மாணாப் பிறப்பு' [நுணரு.

என்கிறார். மெய்ப்பொருள்களல்லாதவைகளை மெய்ப்பொருள்களென்று எண்ணும் மயக்க அறிவால் துன்பத்தைத் தரத்தக்க பிறவிகள் உண்டாகின்றன என்பது இத்திருக்குறட் கருத்து. இத் திருக்குறளிலுள்ள 'அல்ல' என்னுஞ் சொல் நோக்கத்தக்கது. 'அல்ல' என்பதற்குப் பதிலாக 'இல்ல' என்னுஞ் சொல் பிரயோகிக்கப்பட்டிருக்குமாயின் இத் திருக்குறளின் பொருள் முழுதும் மாறுபட்டிருக்கும், மெய்யுணர்தல் என்னும் அதிகாரமே பொய்யுணர்தலாக முடியும்.

இப்போதுள்ள சூத்திரத்தின்படி ஒருவன் ஓர் உண்மைப் பொருளைக் காண்கிறான். அவன் கண்ட பொருள் அவனுக்கு முன்பாகவே இருக்கின்றது. அது இல் பொருளன்று. ஆனால் அவன் அப்பொருளைத் தவறாக விளங்கிக் கொள்ளுகிறான். இச் சூத்திரத்திலுள்ள 'அல்ல' என்னுஞ் சொல்லுக்குப் பதிலாக 'இல்ல' என்னுஞ் சொல்லை உபயோகிப்போமாயின் அப்போது காண்பவன் முன் பொருள் இல்லையெனப்படும். இப் பொருளை எப்படிக் காணமுடியும். பொருள் இலாதிருக்கும் அவனை மனோ பாவனையிற் கண்டதாக ஏற்படும். இது கொள்ளத் தக்கதன்று. சமய ஆராய்ச்சிக்குச் சிறிதும் ஏற்றதன்று.

நாம் எமது கண்களாலும் மற்றைய புலன்களாலும் காணும் மெய்ப் பொருள்கள் எவை? உலகத்தைப் பார்க்கிறோம். இவ்வுலகத் தோற்றங்கள் தனு கரண புவனபோகத்தில் அடங்கும். யாம் நம்பவேண்டிய முதல் உண்மையாவது, மாயையிலிருந்து உண்டாக்கப்பட்ட இவ்வுலகம் நித்தியமென்பது. அசேதனப் பிரபஞ்சமாகிய இவ்வுலகம் உண்மைப் பொருளென்று நிலைநாட்டும் சாத்திரம் கொள்ளத் தக்கதன்று. இரண்டாவது உண்மையாவது, இவ்வசேதனப் பிரபஞ்சத்தை அறியத் தக்க உணர்ச்சி ஒவ்வொரு உயிரிடத்தும் அமைந்துள்ளதென அறிவதாம். இது சேதன பிரபஞ்ச உண்மை யெனப்படும்.

மூன்றாவது உண்மையை யாம் அறியத்தக்கதென்னெனின் சேதன அசேதனப் பிரபஞ்சங்களை இயக்கும் அபார சத்தியின் உண்மையாம். இவ்வியக்கமே கடவுள், ஈசன், இறைவன், சிவன் எனப் பல பெயரால் அழைக்கப்படுவது.

யாம் எமது புலன்களால் மட்டும் அறிவை வளர்ப்பதில்லை. ஐயம் திரிபின்றி யாம் சேதன அசேதனப் பிரபஞ்சத்தின் தன்மையை ஆழ்ந்து யோசிப்போமாயின், பசுக்களாகிய நம்முடைய இலக்கணங்களை நம்மைப் பந்தித்த பாசங்களின் இலக்கணங்களையும் பசுபதியாகிய சிவபிரானுடைய இலக்கணங்களோடும் எத்துணையும் பெரிய இறைவன் எத்துணையும் சிறிய நமக்கெல்லாம் இரங்கி எளிவந்து ஒப்பாது எவற்றும் உபகரிக்கும் கருணை பெருக்கும் புலப்படும்.

(தொடரும்)

## ஆனிமாச விசேஷ தினங்கள்

| | | |
|---|---|---|
| சஉ | (15-6-46) | சனி: இணுவில் கந்தசுவாமிகோயில், ஆனைக்கோட்டை மூத்தநயினர் கோயில் கொடியேற்றம் |
| சு | (20-6-46) | வியாழன்: புலோலிப் பசுபதீசுவரர்கோயில், மண்டைதீவு கந்தசுவாமிகோயில் கொடியேற்றம் |
| அ | (22-6-46) | சனி: வண்ணை மேற்கு, காட்டுத்துறை, கருணாகரவைரவர் பகவதி மாரியம்மை கோயில் சங்காபிஷேகம், இரவு அலங்கார உற்சவம் |
| கூ | (23-6-46) | ஞாயிறு: கலிக்காமநாயனர் குருபூசை |
| ௰ | (24-6-46) | சுன்னாகம் மயிலணி கந்தசுவாமிகோயில் கொடியேற்றம் |
| கக | (25-6-46) | செவ்வாய்: வட்டுக்கோட்டை வீரபத்திரர் சிவன்கோயில் கொடியேற்றம் |
| கஉ | (26-6-46) | புதன்: பிரதோஷவிரதம், கார்த்திகை விரதம், சுளிபுரம் பறளாய் விநாயகர்கோவில், ஊர்காவற்றுறை சிவன் கோவில், அவரங்கால் சிவன்கோவில், சாவகச்சேரி வாரிவனநாத சிவன்கோவில், சிதம்பரம் கொடியேற்றம் |
| கங | (27-6-46) | வியாழன்: வண்வீரமாகாளியம்மை கொடியேற்றம் |
| கச | (28-6-46) | வெள்ளி: அமாவாசை விரதம் |
| கரு | (29-6-46) | சனி: ஒட்டுசுட்டான் தான்தோன்றீசுவரர் கோவில் கொடியேற்றம் |
| கசு | (30-6-46) | ஞாயிறு: கந்தவனம் கொடியேற்றம் |
| ககூ | (3-7-46) | புதன்: மாணிக்க வாசக சுவாமிகள் குருபூசை, நவாலி கந்தசுவாமி கோவில், வாணி காவிலிப்பிட்டிக் கந்தசுவாமி கோயில் கொடியேற்றம் |
| உ௰ | (4-7-46) | வியாழன்: புலோலிப் பசுபதீசுவரர் கோவில் அவரங்கால் சிவன்கோவில் ரதோற்சவம் அமர்நீதிநாயனர் குருபூசை |
| உக | (5-7-46) | வெள்ளி: நடேசர் ஆனி உத்தர தரிசனம் ஷை சிவன் கோயில்கள் தீர்த்தோற்சவம் |
| உஎ | (11-7-46) | வியாழன்: பிரதோஷ விரதம் |
| உகூ | (13-7-46) | சனி: பூரணை விரதம் |

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### சனி ஜூன் 1

காலை 7-15 கீதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7-30 திருப்பாப்புலியூர் ஆர். வெங்கடராமய்யர் வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 சரோஜா ராஜாங்கம் பாட்டு 8.30 சித்ரகானம் 9 முடிவு.

1 திருப்பாப்புலியூர் ஆர் வெங்கடராமய்யர் வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 கதம்பம் 2 தமிழில் செய்திகள் 2-05 ஸ்ரீவாஞ்சியம் கே ராமச்சந்திரஐயர் பாட்டு 2-30 முடிவு.

மாலை 5 ஸ்ரீவாஞ்சியம் கே ராமச்சந்திர ஐயர் பாட்டு 5 40 நம்மாழ்வார் பாசுர விளக்கம் 6 ஆங்கிலத்தில்செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6.15 சரோஜா ராஜாங்கம் பாட்டு 6.30 சித்ரகானம் 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7.15 முன்னேட்டம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 மதராஸில் உள்ள டி (டி கே பட்டம்மாள் பாட்டு) 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 ஜலதரங்கம், வீணை 10 இசைவேளை 10.30 முடிவு.

### ஞாயிறு ஜூன் 2

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 கே.என்.செல்லப்பாபாய் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 லயக்கோலம் 8.30 இசைக் கதம்பம் 9 முடிவு,

12 ஹரிதாஸ் 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 மாதர் பக்கம் 2 தமிழில் செய்திகள் 2-05 டி எஸ் விச்வநாதய்யர் புல்லாங்குழல் 2.30 முடிவு.

மாலை: 5 டி எஸ் விச்வநாதய்யர் புல்லாங்குழல் 5.40 தேவாரா தனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6 15 கே என் செல்லப்பாபாய் பாட்டு 6-45 கிராம நிகழ்ச்சிகள 7-15 சர்க்கரை விநியோகம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 கே எஸ் நாராயணசாமி ஐயர் வீணை 9 ரேடியோ நாடக இசை 9.10 அறிவிப்புகள் வானிலை 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 நாட்டுப் பாடல்கள் 10-10 இசைவேளை 10 30 முடிவு.

### திங்கள் ஜூன் 3

காலை: 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 கிரனூர் என் வைத்தியநாதபிள்ளை, என். கோவிந்தசாமி பிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 செங்காடு இசைக்கதோகுப்பு 8-30 பி ராதாகிருஷ்ணன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பி, ராதாகிருஷ்ணன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 கோடைக் கல்வி 2.30 முடிவு,

மாலை: 5 கிரனூர் என் வைத்தியநாத பிள்ளை, என் கோவிந்தசாமிபிள்ளை நாகஸ்வரம் 5-40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6.15 சித்ரகானம் 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7-15 தாளவாத்ய கச்சேரி 7.30 தமிழில் செய்திகள் 7-45 என் வி வசந்தகோகிலம் பாட்டு 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை (ஆங்கிலம்) 9-45 ஜே வி ராகவன் பாட்டு 10 இசைவேளை 10 30 முடிவு.

### செவ்வாய் யூன் 4

காலை: 7.15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 டி கே பாலகணேசய்யர் புல்லாங்குழல் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 நந்தன் சரித்திரம் 8-30 ஹாரி ஜயசீலன் தேவசகாயம் ஸிதார் 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 மதுரை ஏ சுந்தரம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக் கல்வி 2.30 முடிவு.

மாலை 5 மதுரை ஏ சுந்தரம் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6-15 காஞ்சிபுரம் எஸ் ரத்னசாமி பிள்ளை பாட்டு 6-30 சித்ரகானம் 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7-15 முதலீடு பாதுகாப்பு 7.30 தமிழில் செய்திகள் 7-45 முல்லையின் பிரிவு 8 காஞ்சிபுரம் எஸ் ரத்னசாமி பிள்ளை பாட்டு 8.30 டி கே பாலகணேச ஐயர் புல்லாங்குழல் 9.15 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை (ஆங்கிலம்) 9-15 ஆர் நடராஜன், எல் சுப்ரமணியபிள்ளை இரு வயலின்கள் 10 நீங்கள் கேட்டவை 10-30 முடிவு.

விளம்பரமின்றேல்

பெரும்பணமில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழமும் சோழமும்

(நீர்வை - கோவை)

(முற்றொடர்)

குளக்கோட்டுமன்னன் தான் விரும்பிய பிரகாரம் திருக்குளத் திருப்பணி நிறைவேறியதைக் கண்டு பேருவகை பூத்தான். தன் மந்திரிமாரைப் பார்த்து தனது திருமணத்தின்பொருட்டு அனுரையம்பதிக்குச் செல்வதற்கு எல்லாருமறிய முரசுப்பறை வாயிலாக பிரசித்தப்படுத்தும்படி கட்டளையிட்டான். குறிக்கப்பட்ட சுபதினத்திலே குளக்கோட்டன் சதுரங்க சேனையுடன் தகுந்த முறையாகப் புறப்பட்டான். தந்திரத்தலைவர் சாமந்தர் தானைவீரர் மந்திரத்தலைவர் மன்னிளங்குமரர் முதலானோர் யானை குதிரை தேர் என்னும் வாகனங்களில் ஏறினர். குளக்கோட்டன் காலைவாயருக்கனெனக் கதிர்மணித் தேர்மேற்கொண்டான். வேகமுள்ள குதிரைமீது செல்லும் மகளிர் ஆற்று நீர்த்திரை அன்னப் பெடையை அள்ளிக்கொண்டு செல்லும் காட்சியை நிகர்த்தனர். யானை மீது செல்லும் மகளிர் மின்னலோடு செல்லும் மேகத்தை யொத்தனர். 'தைக்கும் வேற்கணொருத்தி தன்னுயகன், மைக்கருங் குழல் மற்றவள் பேர்சொல, மெய்க்கொருத்தி கணவனைக் கொள விழுமுறு, கைக்கொள் போதினை மோந்தாள் கமிந்தே'' எனனும் இதுபோன்ற சில செய்யுட்கள் வழிநடைச் சிறப்பை உணர்த்துகின்றன. வழிகளிலுள்ள வாவிகளில் நீர்விளையாடல் செய்து உண்டாட்டுக் களியாட்டியயர்ந்தும் அனுரதபுரியின் பக்கத்தேயுள்ள சோலையை யடைந்து அவ்விடத்திற்றானே பாடிவீட்டமைத்துத் தங்கினார்கள். இதனைக்கண்ட ஒற்றர் அனுரதபுரத்தை யடைந்து ஆடகசௌந்தரி என்னும் இராணிக்கு இச்சமாசாரத்தை அறிவித்தார்கள். அரசி அதனைக்கேட்டு ஒற்றருக்கு அநேக பரிசுகளைக் கொடுத்தாள். பெருமகிழ்ச்சி அடைந்தாள், தனது மந்திரியைப் பார்த்து ''தனது விவாக சுபகருமத்தை இந்நகரமெங்கும் பிரசித்தப்படுத்தும்படி கட்டளையிட்டாள். பிரசித்தப்படுத்துவோர் யானைமேலேறி முரசப்பறை வாயிலாக நகரமெங்கும் தெரியப்படுத்தினார்கள். அரசகுடும்ப விவகாரங்களை யானை மீதிருந்து முரசப்பறையடித்துப் பிரசித்தம் செய்தல் அக்கால வழக்காகும். நகரம் முழுவதும் வாழை கமுகு தோரணம் தீபம் தூபம் நிறைகுடம் பூம்பந்தர் மலர்மாலை நடைகாவனம் முதலியவை வால் நன்கு அலங்கரிக்கப்பட்டது. ''குடை வெயில் மறுத்தலானும் கொடியினம் பரப்பலானும், படைமொழி விரித்தலானும் பணிகதிரெறித்தலானும், நடப்பணி மகுடகோடி நகையொளி விரித்தலானும் இடையிடை பகலுமுண்டு மாலையுண்டிரவுமுண்டே'' என்ற இச்செய்யுள் திருமண ஊர்வலத்தின் ஒரு காட்சியை விளக்குகின்றது. மாதவ முனிவர் வேதியர் வேந்தர் புலவர் செல்வர் முதலான பலரும் குழுமிய விவாக மண்டபத்திலிடப்பட்ட அரியணைமீது மணமகனாகிய குளக்கோட்டுமன்னன் வீற்றிருந்தான். அவனுடைய பக்கத்தில் மணமகளாகிய ஆடகசௌந்தரி என்னும் அரசி வீற்றிருந்தனள். ''செந்திருவரியுடன் சேர்ந்த தென்னவும், இந்திரன் சசியுடனிருந்த தன்னவும், ஐந்துடையாசனும் மாதும் வைகினர்'' என்று புராணம் கூறும். நல்ல சுபமுகூர்த்தத்திலே திருமணம் நிறைவேறியது. அரசன் அனுரையம்பதியிலே சிலகாலம் ஆடகசௌந்தரியுடனே வீற்றிருந்தான்.

இப்படிச் சிலகாலம் கழிந்தும் குளக்கோட்டன் கோணேசப் பெருமானைத் தரிசிக்கும் ஆவல் கொண்டவனாய்த் தன் கருத்தை ஆடகசௌந்தரிக்குச் சொன்னான். அரசி தானும் கோணேசரைத் தரிசிக்கவேண்டுமென்று பதிலுரைத்ததும் அரசன் இராணியினுடைய முதல் மந்திரியிடம் இராச்சியப் பரிபாலனப் பொறுப்பை ஒப்புவித்து அரசியுடன் கோணமலைக்குப் புறப்பட்டான். அனுரதபுரத்திலுள்ள பெண்களும் தோழியர் பலரும் அரசிக்குத் துணையாகப் புறப்பட்டனர். அரசனும் அரசியும் சதுரங்க சேனையுடன் புறப்பட்டு மலைகளையுங் காடுகளையுங் கடந்து ஒரு உச்சிக்கால வேளையிலே திருக்குளக்கரையை அடைந்தனர். அரசி திருக்குளத்தையும் பூஞ்சோலைகளையும் அங்கு சஞ்சரிக்கும் பட்சிஜாலங்களையுங் கண்டு ஆனந்த மடைந்தனள், தோழியருடன் நீர்விளையாடியும் மலர் கொய்தும் தான் அனுப்பிய பூதங்களினலே கட்டப்பட்ட அணையைப் பார்வையிட்டு வரும்பொழுது ஓரிடத்திலே அணைகட்டு தாழ்ந்திருத்தலைப்பார்த்து இத்தாழ்வை நானே உயர்த்திக் கட்டுவேனென்று கூறி ஒரு கல்லையெடுத்துப் பதிந்த இடத்திலே வைத்தாள். இதைக்கண்ட தோழியரும் மற்றப் பெண்களும் அந்த வேலையில் ஈடுபட்டார்கள். சிறிதுவேளையில் அப்பதிவு உயர்த்தப்பட்டது. ''கண்டனை சொல்லினர் கட்டுபவ்வணை, பெண்டிர்கள் கட்டேன'' இன்றும் அழைக்கப்படுகிறது. அரசனும் அரசியும் கோணமலைக் கடவுளைத் தரிசித்துக்கொண்டு அங்கே சிலகாலம் தங்கியிருந்தார்கள் அதன்பின் ஆடகசௌந்தரி விலையுயர்ந்த முத்துக்களையும் நவரத்தினங்களையும் பொற்கட்டிகளையும் ஆலயத்திருப்பணிக்கெனச் சேமித்து வைத்து குளக்கோட்டுமன்னனுடன் அனுரையம்பதிக்குத் திரும்பினள். அங்கே சிலகாலம் அரசவீற்றிருந்தபின் கோணேசப்பெருமானுடைய திருவருளினலே ஆடகசௌந்தரி ஆண்மகவு ஒன்றைப் பெற்றாள். அக்குழந்தைக்கு இராசசிங்கன் எனப் பெயரிட்டு வளர்த்து வந்தார்கள். பின்னர்ப் பல வருடங்கள் கழிய ஆடகசௌந்தரி இவ்வுலகை நீத்தாள். குளக்கோட்டு மன்னன் அரசிக்குரிய அந்திய கடன்களை விதிப்படி மிகவும் சிறப்பாகச் செய்தான். இராசசிங்கன் இராச்சியப் பொறுப்பை வகித்தற்குரிய வயதை அடைந்ததும் குளக்கோட்டன் தன மகனுக்கு முடிசூட்டி அனுராம நகர ஆளும்படி செய்து கோணமலைக்குத் திரும்பினன். அங்கே கோணேசப் பெருமானைத் தரிசித்துக்கொண்டு வந்து வருவானாயினன்.

குளக்கோட்டுமன்னன் இந்நாட்களிலே கோணேசப் பெருமானுடைய திருவருளைப்பெற்று ஆலயத்திலே அனேக தொண்டுகளைச் செய்து வருவானாயினன், இருவினையொப்பு சத்தினிபாதமும் கைவரப்பெற்று ஒளிமயமாய் விளங்கினன். ஒரு தினம் அதிகாலையில் எழுந்து பாவநாச தீர்த்தத்தில் மூழ்கி தன்னுடைய சிவபூசையை முடித்து ஆலயத்துட் சென்று திருநந்தி தேவருடைய விடைபெற்று, உள்ளே புகுந்து ஆலயத்தை மும்முறை வலம் வந்து சந்நிதானத்தில் நின்று தரிசித்தலும் கோணேசப்பெருமானுடைய திருவருட்பார்வைபெற்று, மலபரிபாக தொடர்புவிட்டு பசுகரணங்கள் பதிகரணங்கள் ஆகி எல்லையில்லாத பரமானந்த வெள்ள மெய்யுணர்வுடைய ஒளியில் அன்புருவாகி, ''உன்னருட்பாதமன்றி தொன்றிலுங் கவர்ச்சியில்லேன் இன்னவெம்பிறவி நீக்க வருளென விலங்கு [illegible] யதிதஞான வான்சுடர் ஒளியிற் கூட்டித், தன்னடி மலர்க்கீழ்ச் செய்ய தாமரை மலரச் செய்தார்'' குளக்கோட்டு மன்னர் கோணேசப் பெருமானுடைய திருவடிநீழலையடைந்த அற்புதக் காட்சியை அங்குள்ள அர்ச்சகர்களும் அடியார்களும் நேரே தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றார்கள். கோணமலையில் அரசு வீற்றிருந்த பூபாலனும் சித்திரவித்தாரன் என்னும் புலவனும் கனகசுந்தரப்பெருமாளும் இக்காட்சியைத் தரிசித்துப் பரவசமுற்றார்கள். இச்சம்பவத்தின் பின் பலவருடங்களாகத் திருக்கோணாசலத்தைப் பூபாலனும் அனுரையம்பதியை இராசசிங்கனும் அரசு [illegible]

(வரும்)

## கிருமிக் குண்டு

கடந்துபோன மகா யுத்தத்திற் பயங்கரமான அணுக்குண்டு பிரயோகிக்கப்பட்டதைப்பற்றி எல்லாரும் அறிந்திருக்கிறார்கள். அந்த அணுக்குண்டிலும் பார்க்க மகா பயங்கரமான இன்னெர் குண்டை அமெரிக்கர் கண்டுபிடித்திருப்பதாக உத்தியோக தோரணையில் அறிவிக்கப்படுகிறது. ஓர் தேசத்தின்மீது இக் குண்டை வீசினல், அக்குண்டிலிருந்து சிதறும் கிருமிகள் அத் தேசத்திலுள்ள புல் பூண்டு, மரம், செடி, கொடி, கல், யாவற்றையும் பஸ்மீகரமாக்கி நாசம் செய்து விடுமாம்.

## மத்திய மாகாணச் சைவமகாசபை - கண்டி

இச்சபையின் இருபதாம் ஆண்டு நிறைவுவிழா பார்த்திப ஆண்டு பங்குனி மாதம் உசு உ (6.4-46) சனிக்கிழமை மாலை ஆறரை மணியளவில் சைவமகாசபை மண்டபத்தில் ராசவாசல் முதலியார் திரு. நா கனகநாயகம் J P அவர்களின் தலைமையில் மிகவுஞ் சிறப்புற நடைபெற்றது. சென்ற ஆண்டு நிகழ்ச்சிகள், அறிக்கைகள் வரவு செலவுக் கணக்குகள் முதலியன வாசிக்கப்பெற்று சபையின் அங்கீகாரம் பெற்றபின்னர்புது வருட உறுப்பினர்கள் பின்வருமாறு தெரிவுசெய்யப்பட்டனர்.

பரிபாலவலர்கள் திருவாளர்கள்: செ. நாகலிங்கம் S சபாரத்தினம், A. சங்கரப்பிள்ளை.

தலைவர் திரு. நா,கனகநாயகம், உபதலைவர்கள் திருவாளர்கள் S K.ராசசிங்கம். P பாலசிங்கம் M. அம்பலவாணர் A. K வேலுப்பிள்ளை, S கந்தையா இணைக்காரியதரிசிகள் திருவாளர்கள் V. கணபதிப்பிள்ளை, இ. பொன்னுத்துரை, தனதிகாரி திரு. S. கந்தையா அகியோர் உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டபின், திரு. வி முருகேசு அவர்கள் 'சமயமும் வாழ்க்கையும்'' என்னும் பொருளைப் பீடிகையாகக் கொண்டு அன்புநெறி வளர்த்தக்கதாக ஒரு சிறந்த சொற்பொழிவாற்றினர். திரு. பாலசிங்கம் அவர்கள் நன்றிகூறக் கூட்டம் தேவார பாராயணத்துடன் நிறைவேறியது.

—நிருபர்.

## தோட்டப் பாடசாலை ஆசிரியர்கள் கதி!

(சொ, சிவபாதசுந்தரம்பிள்ளை)

இலங்கையில் உள்ள எல்லா மக்களுக்கும் இன்றைய உலகில் முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கிறது, ஆனல் தோட்டப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஓர் விதமான முன்னேற்றம் இருக்கிறதாகத் தெரியவில்லை. இதனை, கல்விப்பகுதியாரும் கவனிப்பதில்லை. ஆசிரியசங்கங்களும் கவனிப்பதில்லை, காரணம் தெரியவில்லை.

தமிழ் S. S. C. பரீட்சையிற் சித்தியடைந்தவர்களுக்கு அரசாங்கம் மற்றைய பாடசாலையில் ரூபா முப்பது கொடுப்பதும் தோட்டப் பாடசாலையில் ரூபா இருபது கொடுப்பதன் காரணம் விளங்கவில்லை. இவர்களுக்கு எவ்விதம் ரூபா இருபது மாதம் ஒன்றுக்குப் போதியது? இவை மனித வகுப்பாரில்லையோ?

தோட்டப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 'இங்கிறமேன்ற்' (சம்பள உயர்வு) ஏற்றதல்லாதா? இவர்களும் மற்றைய பாடசாலை ஆசிரியர்களைப் போன்று கடமை ஆற்றுகிறார்கள். இன்னும் கூடுதலாகவே கடமையாற்றுகிறார்கள் என்று சொல்ல வேண்டும் காரணம், பாஷைத் திருத்தமில்லாத பிள்ளைகளை மிக மிகக் கஷ்டத்துடன்தான் பாஷைத திருத்த முள்ளவர்களாக்கல். இன்னும் பலவுள. நிற்க,

இனியாகுதல் தோட்டப்பாடசாலை ஆசிரியர்களின் நிலைமையை, கல்விப் பகுதியாருக்கு ஆசிரிய சங்கங்கள் எடுத்துக் கூறி அவர்களையும் நன்மையான நிலையில் வைக்குமா? இவர்களை ஆசிரிய சங்கங்கள் புறக்கணியாதிருக்க வேண்டியது அவசியம். இவர்களைப் புறக்கணித்தால் இவர்கள் கதி என்ன வாகுமோ தெரியாது.

## உண்மைச் சமயம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

இம்மூன்று உண்மைகளையும் உடைய சமயமே சற்சமயமெனப்படத்தக்கது இதுவே சைவசமயம்.

இனி அசத்தியம் அல்லது பொய் இன்ன தென்பதை ஆராய்வாம். அசத்தியமாவது மயக்கஅறிவு என்று முன்னரேகண்டோம், ஒருபொருளை மற்றொன்றாகப் பிழைபடக் கொள்ளுவதேயன்றி அப்பொருளை முற்றும இல்பொருளென்றுசொல்லுவதன்று. யாம் மேலே காட்டிய உண்மைப் பொருள்களுள், பதி பசு பாசம் என்பவை. அவை சித், அசித், ஈஸ்வரன், சகத், சீவ, பரம் என்றும் கூறப்படும். இம் முப்பொருள்களுள் ஒன்றை மற்றொன்றாகக் கொள்ளுவது பிழை அல்லது அசத்தியமாகும். யாம் உடம்பை உயிரென்றுகருதி உடம்பிற்கு வேண்டியவற்றைச் செய்கிறோம். உடம்பிற்கு இன்பமளிப்பதை யாம் விரும்புகிறோம், துன்பங் கொடுப்பதை வெறுக்கின்றோம். இப்படிச் செய்வதால் கன்மவினை ஏற்படுகின்றது. உயிரைக் கடவுளென்று சொல்லுவதும் பிழை, கடவுளை உயிரென்று கூறுதலும் பிழை. இப்படித் திரிபான உணர்வினுல் பல சமயங்கள் தோன்றலாயின. திரிபுணர்வின்றி முப்பொருளுண்மையைக் கூறும் சைவசமயமே. நன்னெறியாவது நமச்சிவாயவே.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியல்

## சென்னைச் சட்டசபைத் தலைவர் தேர்தல்

சென்னைச் சட்டசபைக்கு திரு ஜே சிவசண்முகம்பிள்ளை தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். ஸ்ரீ பிள்ளை அவர்கள் தீண்டா வகுப்பைச் சேர்ந்தவர்; காங்கிரஸ்வாதி; சென்னை நகரத்து 'மேயராக' விருந்தவர் மேல்சபைக்கு ஸ்ரீமான் இராமக்கிருஷ்ணராஜு தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

●

## எல்லைப்புரத்தில் அதிருப்தி

பிரிட்டிஷ் மந்திரிசபையார் யோசனைப்படிக்கு மாகாணங்கள் கட்டாயமாகக் குறிக்கப்பட்ட ஓர் கோஷ்டியில் சேர்க்கப்படுவதை ஆட்சேபித்து எல்லைப்புறக் காங்கிரஸ் நிருவாகசபை ஓர் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அரசியல் நிர்மாணசபை கூடி முடிவான ஒழுங்கைச் செய்தபின்னரே, மாகாணங்கள் தாம் விரும்பியபடி, கோஷ்டிகளிலிருந்து பிரியலாம், அதுவரை தாம் நிச்சயித்தபடியுள்ள கோஷ்டிகளில் சேரத்தான் வேண்டும் என்பதே மந்திரிகளின் தீர்ப்பு. இதனை எல்லைப்புறமும் அசாமும் பலமாக ஆட்சேபிக்கின்றன. இப்பிரச்சினைபற்றிப் பொதுமக்களின் அபிப்பிராயத்தை அறிவதற்கு எல்லைப்புறக் காந்தி அப்துல் கபார்கான் அவர்கள் மாகாணத்திற் சுற்றுப் பிரயாணம் செய்வார். சுற்றுப்பிரயாணம் முடிந்ததும் எதிர்கால நடவடிக்கையை வகுப்பதற்காக ஓர் மாகாண மகாநாட்டைக் கூட்ட அவர் உத்தேசித்திருக்கிறார்.

●

## முடிவானதல்ல

பிரிட்டிஷ் மந்திரிகள் வெளியிட்டுள்ள திட்டம் ஓர் வேண்டுகோள், ஓர் முன்னேற்றம், அன்றி ஓர் முடிவான திட்டமல்ல என்று மகாத்மா காந்தி, மந்திரிகள் வெளியிட்டுள்ள அரசியல் யோசனைகளைப் பற்றித் தமது அபிப்பிராயத்தைச் சென்ற வாரம் வெளியான 'ஹரிஜன்' பத்திரிகை மூலம் கூறுகிறார். இன்னும், இந்த யோசனைகள் ஓர் மதிப்புள்ள சாதனம்என்றும், பிரிட்டிஷார் செய்யப்போகும் தியாகத்தின் அறிகுறிச் செயல் என்றும் அவர்குறிப்பிடுகிறார்.

●

## இடைக்கால அரசாங்கம்

எது எப்படியிருந்த போதிலும் காங்கிரஸ், மந்திரிகள் வகுத்த யோசனையை ஏற்றுக்கொண்டு இடைக்கால அரசாங்கத்தை அமைத்துநடாத்தும் என்று ஆதாரபூர்வமான செய்திகள் கிடைக்கின்றன. மிஸ்ரர் ஜின்னுவும் இந்த அரசாங்கத்திற் சேரக் கூடும் என்று சொல்லப்படுகிறது. அவரே பிரதம மந்திரியாவார் என்றும் பின்வருவோர் மந்திரிகளாக நியமிக்கப்படுவர் என்றும் இராஜீய நிபுணர்கள் பேசிக்கொள்கின்றனர். பண்டிதர்நேரு: அந்நியநாட்டு விவகாரமந்திரி, ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியார்: நிதிமந்திரி: ஸ்ரீ சரத்சந்திரபோஸ்: சட்டமந்திரி, ஜனாப் அஸாப் ஆலி: பாதுகாப்பு மந்திரி, இவர்களுடன் நவாப் ஸதா லியாகத் அலிகான் அல்லது சர்தார்வல்லபாய் படேல், மாஸ்ரர் தாராசிங், சேர். ராமசாமி முதலியார், சேர் அர்தேஷர்தலாப், டக்ரர் ஷியாம் பிரசாத் முக்கர்ஜி, டக்ரர் அம்பெக்கார், ராஜகுமாரி அமிர்தகௌரி என்பவர்களும் மந்திரிகளாக நியமிக்கப்படுவர் என்று யூகிக்கப்படுகிறது.

## சம்பளத்திட்டம் ஓர் புரட்டு

### ஏழைக்கும் செல்வனுக்கும் ஓரே நீதி

அரசாங்கசபையில் விவாதம்

சென்ற புதன்கிழமை அரசாங்க சபையில் உத்தியோகத்தர் சம்பள விஷயமான தீர்மானம் விவாதிக்கப்பட்டபோது பிபிலைப் பிரதிநிதியான மிஸ்ரர் தகநாயக்கா பின்வருமாறு குறிப்பிட்டார்:

"அரசாங்க சேவையிற் குறைந்த வேதனம் பெறும் உத்தியோகத்தர்க்கு வேதனத்தை உயர்த்த வேண்டுமேயன்றி ஏற்கெனவே கொழுத்த வேதனம் பெறும், நீதிபதிகள், சிவில் சேர்விஸ் உத்தியோகத்தர், அதிகாரிகள் என்பவர்கள் கேட்காமலிருக்கவே, அவர்களுடைய வேதனத்தை உயர்த்தவொண்ணுது.

"இப்போது சுதேசபாஷா ஆசிரியருள்ளவர்களுக்கு அளிக்கவிருக்கும் அதிகரிப்பு மிகவும் அற்பம். அவர்கள் விஷயத்தில் அநியாயம் செய்யப்படுகின்றது. அவர்கள் ஒருங்கு சேரவேண்டும். பலம்கொள்ள வேண்டும். வேண்டுமானல் வேலை நிறுத்தம் செய்யவும் வேண்டும். அப்போதுதான் அவர்கள் தங்கள் லட்சியத்தைநிறைவேற்றி மரியாதையுடன் வாழ முடியும்.

"பொலிசார்க்கும் இப்படியேதான் அநீதியான வேதனமுறை விதிக்கப்பட்டிருக்கிறது. பொலிசார் தமக்குரிய ஸ்தாபனத்தைப் பலப்படுத்தி, வேண்டுமானல் வேலை நிறுத்தமும் செய்தல் வேண்டும்.

"சமீபகாலத்தின்போது ஓர் இழவு வீட்டிலே, நம் உள்நாட்டு மந்திரி சென்றார். அவருக்கு முன்னும் பின்னும், அக்கமும், பக்கமுமாகப் பொலிசார் தாளம்போட்டுப் பவனி வந்ததைக் கண்டேன்.

"அரசாங்கத்தில் குறைந்த சம்பளம் பெறும் ஒவ்வொருஉத்தியோகத்தனுக்கும், இலவசமாக உணவு கொடுக்கவேண்டும் என்று நான் கூறுவேன்; இன்றுள்ள 1ரூபாய் யுத்தத்துக்குமுந்தி 25 சதத்துக்குச் சமானம். அதறகுத்தக்கதாக ஏழைகளின் வருமானத்தை உயர்த்தவேண்டும்.

"புதிய சம்பளத்திட்டம் என்பது ஓர் பெரிய புரட்டு! இந்தத் திட்டத்தையும் இதனை ஆக்கிய இரண்டு பிரகஸ்பதிகளின் படங்களையும் கால்பேஸ் மைதானத்தில் சுட்டுக்கொழுத்தவேண்டும்."

## பிரிட்டிஷ் கடற்படை மந்திரி

அரசியற் பிரச்சினை விஷயமாக இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள மந்திரிகள் கோஷ்டியின் அங்கத்தவரும், பிரிட்டிஷ் கடற்படை மந்திரியுமான மிஸ்ரர் அலெக்ஸாந்தர் சென்ற ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார் கிழக்கிந்தியக் கடற்படையைப் பார்வையிட்டு, இங்குள்ள கடற்படை நிலையங்களின் நிலைமையை அவதானிக்கவே அவர் விஜயம் செய்துள்ளார். அவர் சில தினங்களுக்கு இங்கே இருப்பார்.

## இலங்கைத் தொழில் மந்திரி

இலங்கை அரசாங்கத்தின்கைத்தொழில் வர்த்தகப்பகுதி மந்திரியாயுள்ள மிஸ்ரர் ஜி. வி எஸ். கொறியா சுகவீனங்காரணமாக இங்கிலாந்து சென்று ஓர் பிரபல வைத்தியர்மூலம் சத்திர சிகிச்சை பெற்றுக் குணமாகி, சென்ற 26-ந் திகதி இங்கிலாந்திலிருந்து புறப்பட்டகப்பலில் இலங்கைக்குப் புறப்பட்டுவிட்டார்.

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

'அழாதேயடியம்மா, உன் தாயார் சொல்வதைக் கேள்" என்று தாமும் அழுதழுது சொல்ல, நான் ஒருவாறு தேறினேன்; 'என் குழந்தாய் நீ கதருதே, பதருதே, தலைவிதியைக் கடந்தார் உலகத்திலில்லை; புத்தியீனமாய்த் தற்கொலை செய்துவிடாதே; உன் சிற்றப்பாவோடும், சிறியதாயாரோடும், தங்கைச்சியோடும் இருவரோடும் சண்டையிடாதே, எதிர்த்துப் பேசாதே, அவர்கள் உன்னைப் பேணி வளர்ப்பார்கள்; உனக்கு ஆகவேண்டியவைகளையெல்லாஞ் செய்து வைப்பார்கள்; உன் அப்பரும் நானும் உன்னைக் கைவிட்டாலும் வேறு ஆர்தான் கைவிட்டாலும், உன்னைப் படைத்த ஈசனுகிய அர்தப் பரம பிதாவும் உலக மாதாவாகிய ஈசுவரியும் உன்னை ஒருபோதுங் கைவிடமாட்டார்கள்; அவர்களிடத்திலேதான் உன்னை அடைக்கலமாகக் கொடுத்துப் போகிறேன்; இது என் மரணப்படுக்கை யென்பதை விளங்கிக்கொள்; ஐயோ மகளே, உன்னை எப்பிறப்பிற் காண்பேன் இனி"என்று அட்சர சுத்தியாக ஆவேசங் கொண்டாள்போற் சொல்லி, என்னை உற்றுப் பார்த்து விட்டுத் தம் கண்களை மூட, "அம்மா, என்னைப் பெற்ற ஆச்சி, என்னைக் கைவிட்டுப் போறியோ" என்று கதறிக்கொண்டு நிலத்தில் விழுந்தேன்; அதன்பின் நடந்ததை நான் அறியேன்; விடிய என் சிறியதகப்பனுர் வீட்டுப் படுக்கையறையிலுள்ள கட்டிலிற் படுத்தபடி கண்விழித்தேன்.

### "தந்தையார் போயினர் தாயாரும் போயினர்"

கண் விழித்தவுடனே, அம்மா,அம்மா என்று கூப்பிட்டேன்;என் சிறிய தாயார் ஓடிவந்து, "என்னடியம்மா, ஆரைக் கூப்பிடுகிருய்' என்று பரிவுடன் கேட்க, "என் அம்மாவை ஒருமுறை பார்க்கப் போகிறேன்" என்றேன்; "சற்றுப் பொறுகண்ணே, சிற்றப்பா எங்கோ போய்விட்டார்; வந்தவுடனே அவரோடு உன்னையும் அனுப்பி வைக்கிறேன்" என்று என் சிறியதாயார் சொல்ல, நான் நிசமென நம்பியிருந்தேன். சிற்றப்பா அன்று மத்தியானம் வரை அங்கு வந்திலர்; மத்தியானத்தின் பின்புதான் அவர் வந்தார்; என் சிறிய தாய்தந்தையர் இருவரும் தம்மளவில் ஏதோ கலந்து இரகசியமாகப் பேசிக் கவலைப்படுவதையும், என்னைப் பார்த்துப் பார்த்து இரங்குவதையும் நான் அவதானித்தேன்; என் தங்கையும் அன்று முழுதும் என்னை விட்டுப் பிரியாமலே கவலையோடிருந்தாள்; என் மனம் ஆறுதலின்றித் துடித்தது; காரணமில்லாமல் என்னுள்ளத்தில் ஏக்கம் பிறந்தது; சரீரம் நடுங்கியது; இவைகளையெல்லாம் அவதானித்த நான் என் தாயாருக்கு ஏதோ போபத்து நேர்ந்ததென்றெண்ணி "ஐயோ! உங்களுக்குப் புண்ணியங் கிடைக்கும் என்னைப் பெற்றவளுடைய கண்ணில் விழிக்கப் போகிறேன்; என்னை இந்த நிமிஷமே கூட்டிக்கொண்டு போய்க் காட்டுங்கள்; இல்லையேல் நானே நேரிற் போகப் போகிறேன்" என்றுசொல்லியலறினேன்; என் சிறிய தாயார் அழ, தங்கையழ என் சிற்றப்பரும் வீறிட்டுக் கதறி "ஐயோ! மகளே, இன்று விடியற்புறமே உன் தாயாரின் பிரேதத்தை அதிகாரிகள் எடுப்பித்து அடக்கஞ் செய்துவிட்டார்கள்; எங்களை மனம் நோவாதே; நாங்கள் உன் தாய்க்குச் செய்ய வேண்டிய கிரியைகளையுஞ் செய்து தகனம் பண்ணக் கொடுத்து வைக்கவில்லை; என் அண்ணர் கதியும் உன் தாயார் கதியும் இப்படியாயின; மகளே! எழுதாவிதிக்கு அழுதாவதென்ன, நீ தேறியிரு; எல்லாம் இறைவன் செயல், எங்களைஉன் தாய்தந்தையராகவும், எங்கள் பிள்ளையை உன் உடற் பிறப்பாகவும் இன்றுதொடக்கம் எண்ணி நடவடியம்மா; மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச் சாந்துணையுஞ் சஞ்சலந்தானடியம்மா; ஆனுலும் ஆண்டவன் உன்னைக் கைவிடமாட்டான் கண்ணே" என்று சொல்லி சிறிய தந்தை தாயார் தங்கள் மத்தியில் என்னை எடுத்திருத்தி என் மூதுகைத் தடவிக் கண்ணீர் துடைத்து முகந்திருத்தி ஒருவாறு என்னைத் தேற்றினர்கள்; எல்லோரும் ஸ்நாநஞ் செய்தபின் என் தங்கை என்னையும் ஸ்நானஞ்செய்வித்து உடனிருத்திஉணவூட்டித் தானுமுண்டாள்; சிலநாட்களாக அவள் என்னுடன்உண்பதும் உறங்குவதும் பக்கலிவிருந்து தேறுதல் சொல்லுவதுமானுள் என்சகோதரிநான்கண்ணீர் விடுவதைக்கண்டால்தானும்உடனே;கண்களில் நீர்ததும்பத் தேறுதல் சொல்லி என்னை ஆற்றுவாள்; அன்னை சிவலோகஞ் சேர்ந்தநாள் தொடக்கம் நான் "தந்தையார் போயினர் தாயாரும் போயினர் தாமும் போவார்..." என்ற தேவாரத்தையே மெல்லச் சொல்லிக் கடவுளைச் சிந்தித்தபடி காலம்போக்கினேன்; ஐயோ பெற்றதாயை எப்படி மறக்கமுடியும்! (வரும்)

## பொலிஸ் படைக்கு அதிக ஆட்கள்

அடுத்த ஆண்டில் இப்போதுள்ளதிலும் பார்க்கப் பொலிஸ்படையை அதிகரிக்க உள்நாட்டு மந்திரசபை தீர்மானித்திருக்கிறது, அதன் திட்டப்படி 1443 சாதாரண பொலிசாரும் 161 சார்ஜண்டுகளும் 91 பரிசோதகர்மாரும், 15 அதிகாரிகளும் நியமிக்கப்படுவர்.

## பால் உணவுக் கட்டுப்பாடு

நகரத்திலேனும், போத்திலிலேனும் அடைத்து இங்கு இறக்குமதியாகும் பால் உணவுப் பொருள்களின் விற்பனைக்குரிய கட்டுப்பாடு இன்னும் மூன்று மாத காலத்தில் முற்றுக நீக்கப்படும் என்று தெரிகிறது,


## திருமண அழைப்பு

நிகழும் விய ஆ வைகாசிமீ உ௰ந் திகதி (3-6-46) திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் வேலணைமேற்கு சங்கீதபூஷணம்-இசைமணி ஸ்ரீ P. சந்திரசேகரன் (Ceylon Govt. Scholar) அவர்களுக்கும, சரவணை செல்வி M, மனேன்மணியர்மாளுக்கும் திருமணம் நிகழவிருப்பதால், அத்தருணம் அன்பர்கள், உறவினர்கள் முதலானோருடைய அன்பையும் ஆசியையும் பேரிதும் வேண்டுகிறோம்.

சரவணை, வேலணை (P. O.)
28—5—46

இங்ஙனம், தங்கள்
வே. பேரம்பலம்.
ப. பாலசுப்பிரமணியம்.


Mis 68 31-5-46

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநீதி இழைக்க வேண்டாம்!

## இந்தியரை நாடுகடத்துதல் நீதியல்ல
## தமிழரை அழித்துஒழித்தல்முடியாதவிஷயம்

### தமிழர் மகாநாட்டுக் கூட்டவிபரம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தை சைவமங்கையர் கழகத்தில் நிகழ்ந்த அகில இலங்கைத் தமிழர் மகாநாட்டில், இலங்கையின் புதிய அரசியலமைப்புச் சட்டங்களைக் கண்டித்தும், இந்தப் புதிய திட்டத்தினால் இந்திய மக்களுடைய உரிமைகள் பாதிக்கப்படுவதால் அத்தகைய கட்டுப்பாடுகளை விலக்கவேண்டும் என்றும், தமிழ்மொழியை உத்தியோக பாஷைகளில் ஒன்றாக நிர்ணயிக்கவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

இலங்கைவாழ் இந்தியர்கள் சம்பந்தமான தீர்மானம்பற்றி டக்டர் ஈ. எம். வி. நாகநாதனவர்கள் பின்வருமாறு கூறினார்.

"இலங்கையின்எதிர்காலமும்இந்த இலங்கையில் வதியும் சிங்கள தமிழ் மக்களின் எதிர்காலமும் ஆசியாவுடன் தொடர்புள்ளதாகவே யிருக்கும். இலங்கையில் உள்ளவர்கள் யாவரும் இந்தியமக்கள்தான். சிலர் முன்வந்திருக்கலாம்; சிலர் பின்வந்திருக்கலாம். அதற்காக முன்வந்த இந்தியர் பின்வந்த இந்தியரை வெளியே போ" என்று கூறுதல் நீதியாகாது. இலங்கைக்கு, சிங்களவர்களிலும் பார்க்கத் தமிழர்களே முதலில் வந்து குடியேறியிருக்கிறார்கள்.

"இலங்கையில் இன்றுஉள்ள சகல மக்களும் ஒரேவிதமாக நடத்தப்படல்வேண்டும். இலங்கையில் நிரந்தரமாக வாழும் இந்தியருக்கு தமது இரத்தத்தைச் சிந்த இந்த நாட்டை வளம்படுத்திய இந்தியருக்கு — வாக்குரிமையை மறுப்பதும் ஏனோ?

இந்தியத் தொழிலாளிகள் இல்லாவிட்டால், இந்த இலங்கை இப்படியான நிலைக்கு வந்திருக்குமா? முன்னர் காடு அடர்ந்து கொடிய விலங்குகள் சஞ்சரித்த வனங்களையும் புதர் நிலங்களையும் அவர்கள் பொன்கொழிக்கும் கழனிகளாக மாற்றியதற்கு வாக்குரிமையை மறுப்பது மனிதத் தன்மையாகுமா?".

தமிழ்ப்பாஷையையும் அரசாங்க பாஷையாக்கவேண்டும் என்னும் தீர்மானத்தை ஸ்ரீ எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் எடுத்தாண்டு பின்வருமாறு குறிப்பிட்டார்.

'தமிழ் மக்களது உயிர்நாடி போன்றது தமிழ்மொழி: அதனை அழித்துவிடவே சிங்களத் தலைவர்கள் கங்கணங்கட்டி நிற்கின்றனர். தமிழை அழித்துவிட்டால், தமிழர் என்னும் பெயரே நிலைநிற்கமாட்டாது"

இத்தீர்மானத்தை ஆதரித்துத் திரு. திக்கம் செல்லையாபிள்ளை பின்வருமாறு கூறினார்:

"சிங்கள மொழியில்உள்ள சொற்கள் பல தமிழ், சம்ஸ்கிருதபாஷைகளிலிருந்து அபகரிக்கப்பட்டன். சிங்களப்பாஷையில்உள்ள நூல் ஏதாவது வேறு எப்பாஷையிலாவது மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறதா? அப்பாஷைக்கு ஏதாவது இலக்கணம் உண்டா? இப்படிப்பட்ட ஓர் மொழியைத் திணித்துத் தமிழ் மக்களை ஒழிக்கலாம் என்று சிங்களத் தலைவர்கள் எண்ணுவரேயானால், அது பகற்கனவாகத்தான் முடியும்".

### ருஷியா பகிஷ்காரம்

ஜூன் மாதம் 8-ம் திகதி, லண்டனில் நிகழவிருக்கும் வெற்றி அணிவகுப்பில் கலந்துகொள்ள ருஷியா இணங்கவில்லை. ...ற்றும் நேசதேசத்தினர் பங்கெடுத்துக் கொள்வர்.

## சேக்கிழார் நாயனார் குருபூசை

நிகழும் வியஹூ வைகாசிமீ ௨௧-ந் உ (3-6-46) திங்கட்கிழமை யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை யாதரவில் கீழே உள்ள கிரமப்படி சேக்கிழார் நாயனார் குருபூசை நடைபெறும்.

நிகழ்ச்சிகள்

மு. ப 10 மணி—2 மணி

நீராவியடி திலகவதியார்மடத்தில் கடவுள் வழிபாடு நால்வர் பூசை, உமாபதி சிவாசாரியர் அருளிச்செய்த சேக்கிழார் புராணம் படித்துப் பயன் சொல்லுதல், மகேசுர பூசை.

இரவு 7 மணி—9 மணி

நீராவி மடம் ஸ்ரீமத் ந. சோமசுந்தரக் குருக்கள் அவர்கள் தலைமையில் பண்டிதர் திரு மு. வேதநாயகம் அவர்கள் சேக்கிழார் நாயனார் என்னும் பொருள்பற்றி ஒருசொற்பொழிவு நிகழ்த்துவார்கள்என்று மேற்படிசபைக் காரியதரிசி தெரிவிக்கின்றார்.

## "ஆசிரியர்கள் தொகை அருகிவிடும்"

"சிங்களத்தையும் தமிழையும் அரசாங்க பாஷைகளாக்க வேண்டும் என்ற கொள்கை பரவிவரும் இக்காலத்தில் அப்பாஷைகளைப் படிப்பிக்கின்ற ஆசிரியர்களின் சீவனத்துக்குத்தக்க வேதனம் கொடுக்காமல் அவர்களைப் புறக்கணிப்பது அவ்விரு பாஷைகளையும் குழி தோண்டிப் புதைப்பதுபோலாகும். இந்நிலையில் சுயபாஷா ஆசிரியராய் வர யார்தான் விரும்புவர்? காலகதியில் அவர்கள் தொகை குறைந்துகொண்டே வந்துவிடும்" என்று கம்பளைப்பகுதிச் சுயபாஷா ஆசிரியர்களின் விசேஷ பொதுக்கூட்டம் ஒன்றில் ஷை ஆசிரியர்கள் சங்கக் காரியதரிசி ஸ்ரீ சி சின்னத்தம்பி குறிப்பிட்டார்.

## தேர்தற் றொகுதி நிர்ணயசபை

இலங்கைப் பாராளு மன்றத்திற்கான பிரதிநிதிகளை அனுப்பும் தேர்தற் றொகுதிகளை நிர்ணயிக்க ஒரு சபை நியமிக்கப்பட்டிருக்கிறது. அதன் தலைவர் மிஸ்ரர். எல். எம். டி சில்வா ஆவர் அச்சபை தன் வேலையை ஆரம்பித்துவிட்டது. இன்னும் மூன்று மாதத்தில் அது தன் அறிக்கையைச் சமர்ப்பிக்கும்; வடமாகாணத்துக்கு 9 தொகுதிகளும் கீழ்மாகாணத்துக்கு 6 தொகுதிகளும் இருக்குமாம்.

## இனி அதிகாரம் வருமாம்!

இலங்கையிலே குடியேற்றம், குடியேறியவர்களின் வாக்குரிமை என்னும் விஷயங்கள் பற்றி வேறெந்த அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தைகள் நடாத்த இதுவரை இலங்கைக்கு அதிகாரமில்லை என்றும் புதிய அரசியல் சட்டப்படி இது கிடைத்ததும் இந்தியாவுடனே பேச்சுவார்த்தைகளை நடத்தி திருப்திகரமான ஓர் ஏற்பாட்டுக்கு வரலாமென்று நம்புவதாயும் மிஸ்ரர் D. S. சேனநாயகா அரசாங்கசபையில் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளித்தார்.

### பிறர்தேசத்தில் எம் படைகளை நிறுவுதல் நீதியல்ல

எகிப்திலிருந்து பிரிட்டிஷ் படைகளை நீக்குவது சம்பந்தமாக சென்ற வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் மிஸ்ரர் சேர்ச்சில், அந்நியநாட்டு மந்திரியான மிஸ்ரர் பீவனைக் கண்டித்தார் இன்னொருவருடைய நாட்டில் அவர்களுடைய விருப்பமும் அநுமதியும் இன்றி எம்முடைய படைகளை வைத்திருத்தல் முறையுமல்ல நீதியுமல்ல என்று மிஸ்ரர் பீவன் பதிலிறுத்தார்.

## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை

நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

(Mis.25 23-4 46 to 22-3-47)

## தந்தரோகசஞ்சீவி
### கந்தசாமி வைத்தியர்
## சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ யிலும் அனுப்புவோம்.
தபால்கூலி செலவு வேறு:

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 27 26-4 46—25-10-46

## தேவை

தாதிமார்களும், அற்றண்டன் மார்களும் தேவைப்படுகிறார்கள்.

சம்பளம் அவர்களுடைய படிப்புக்குத் தக்கவிதமாய்க் கொடுக்கப்படும்.

விண்ணப்பங்கள் 1946ம் ஆண்டு ஆனி மாசம் 30ந் திகதிக்கு முன் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பவும்

காரியதரிசி,
ஐக்கிய ஆங்கில வைத்தியசாலை.
தொல்புரம், சுளிபுரம்.

Mis 67 31 5-46

## பகிரங்க அறிவித்தல்

ஐயன்மீர்!

எனது ஆட்சியும் சொந்தமுமான நீர்வேலி இறை வடுவாவுடை நெ. ப. 15 ஐ (கிழக்கு கதிர்காமர் கார்த்திகேசுவுக்கும், தெற்கு விதையா நிலமும், மேற்கு கதிர்காமர்கந்தையாவுக்கும், வடக்குசீனியர்கந்தையாவுக்கும் அம்மன் கோவிற்குமுரிய ஆதனங்களை எல்லையாகவுடைய ஆதனத்தைச்) சிலர் கள்ளச் சாதனம் செய்து வைத்திருப்பதாக அறிகிறேன். ஆதலின் இவ்வாதனத்தைப்பற்றிய சகல உரிமைகளும் எனக்கே உண்டென்பதைக் கற்பித்துக்கொள்கிறேன்.

இங்ஙனம்
P. சின்னையா - நடராசா

நீர்வேலி தெற்கு. 20—5—46
Mis 51 - 24-5—23-6-46

### விற்பனைக்கு

பரந்தன்-முரசுமோட்டை பெரியறோட்டில் 2½ கட்டையில் 48 ஏக்கர் நெல்வயல் (5 ஏக்கர் மேட்டுநிலமும் 43 ஏக்கர் நெல்விளையும் நிலமும்) விற்பனைக்கிருக்கிறது. காணி முழுவதும் செவ்வனே முட்கம்பியால் வேலியடைக்கப்பட்டுள்ளது பனைமரவளைகள் திராந்திகள் என்பனவற்றைக் கொண்ட இரண்டு அறை; செங்கற் கட்டிடவீடும் கூலியாட் கொட்டிலும் உண்டு: பின்வருவோரிடம் அறிக.

A. தில்லையம்பலம்,
நகர ஓவசியர்,
வண்ணார்பண்ணை.

Mis 65, 28—31-5-46.

## குடைமுத்திரை (மார்க்) ஓடுகள்

நீங்கள் நவமாகக் கட்டியெழுப்பும் கட்டிடங்களுக்கு இன்றியமையாத

## கலிக்கற் ஓடுகள்

இவைகளின் கனம் மிகவும் குறைக்கப்பட்டு, வயிரம் மிகவும் கூட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, இவைகளினால் வேயப்படும் கூரைகளுக்குப் பாரம் மிகக் குறைவாயிருக்கும். இவைகளின் கனத்துடன், இவைகளால்வேயப்பட்டிருக்கும் பரப்பை ஒத்துப்பார்த்தால் விசாலம் மிகவும் அதிகமாய்க் காணப்படும்.

காற்றினால் உடையாது. மழையினால் நீர் பொசியாது. மிகவும் கரிசனையர்கவும், நுணுநுணுக்கமாகவும் செய்த ஆராய்ச்சியின் பயனாவே இவைகள் தயாரிக்கப்பட்டன.

ஓடுகள் வேண்டுமாயின் எவ்வளவு தேவையென்று எலவே 'ஏசண்டுகளுடன்' தாமதியாது பதிவுசெய்து வைப்பது நன்று. வருகிறவாரம் ஒருகப்பல் ஓடுகள் இறக்குமதி செய்வோம்.

'சோல் ஏஜென்ஸ்'
ஜே. செரூபிம் அன் பிறதர்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

Mis 243 B 12-3—12-9 (வெ)

## நவீன வேலைப்பாடுள்ள

பவுண் நகைகள், வெள்ளி நகைகள், வைர நகைகள், கல்நகைகளுக்கு

### நம்பிக்கைக்கும் நாணயத்துக்கும் சிறந்த இடம்

## கந்தையா பெரியதம்பி

நகை வியாபாரி, 509 காங்கேசந்துறை றோட்
தட்டாதெரு யாழ்ப்பாணம்

Mis 196 7-1 — 7-7 (வெ)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்

Printed and Published by Pandit V. T. Sambandhan, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday May. 31, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org